

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அய்யப்பாக்கம் ஊராட்சியில் இல்லந்தோறும் இளைஞரணி உறிப்பினர் சேர்க்கை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் எம்.சி. தலைமையில்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல். ஏ,வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அ.ம.துரைவீரமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் எம்.சி., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் க.செந்தில் குமார்,எஸ்.பி. முரளிகிருஷ்ணன்,எம். சபரி ராஜா,எஸ். ஜனார்தனன் ம.ஏ. செந்தில்குமார் உள்ளிட்ட இளைஞரணி நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தேனீ வளர்ப்புத் தொகுப்பு மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த

# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.22 கோடி சுழல் நிதி!

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வழங்குகிறது!

சென்னை, நவ.12-

தமிழ்நாட்டில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சமுதாய ரீதியாக வலுப்படுத்திடும் வகையில், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழுவினருக்கு பல்வேறு நவீன தொழில்களில் பயிற்சி அளித்து, அத்தொழிலை துவங்குவதற்குத் தேவையான நிதி உதவியினையும் வழங்கி வருகிறது.

இதன் ஒருபகுதியாக, சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தேனீ வளர்ப்பினை மேற்கொள்வதற்குத் தேவையான பயிற்சி, தொழில்நுட்ப உதவி, உட்கட்டமைப்பு மற்றும் நிதி உதவியினை வழங்கிடும் வகையில், நடப்பாண்டில் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் ஒரு சிறப்புத் திட்டத்தினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ளது.

தேனீ வளர்ப்பினை சுய உதவிக் குழுவினரிடையே ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு தேனீ வளர்ப்புத் தொகுப்பிற்கும் ரூ.3 இலட்சம் சுழல் நிதி வழங்கி, தமிழ்நாட்டில் மொத்தம் 74 தேனீ வளர்ப்புத் தொகுப்புகளை உருவாக்குவதற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

20 மகளிர் கொண்ட ஒவ்வொரு தொகுப்பிலும் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 தேனீ பெட்டிகள் வீதம் மொத்தம் 100 தேனீப் பெட்டிகள் வாங்குவதற்காக ரூ.1.5 இலட்சமும், முகக்கவசம், புகை மூட்டி, தேனீ பிரஷ், தேன் பிரித்தெடுக்கும் கருவி போன்ற உபகரணங்கள் வாங்குவதற்கு 20 ஆயிரம் ரூபாயும், தேன் சுத்திகரிப்பு, பதப்படுத்தும் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கு ரூ.1.15 இலட்சமும், இவ்வியந்திரங்களை நிறுவுவதற்கு 11 ஆயிரம் ரூபாயும், தேனீ வளர்ப்பு, தேன் பதப்படுத்துதல் தொடர்பான பயிற்சிக்கு 4 ஆயிரம் ரூபாயும் என ஒவ்வொரு தொகுப்புக்கும் ரூ.3 இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்படுகிறது.

இத்திட்டம் சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காக, சுய உதவிக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள மகளிர் தேர்வு செய்யப்பட்டு, தேனீ வளர்ப்பில் முனைப்பாக ஈடுபட்டு வரும் தொழில் முனைவோர்கள் அல்லது தோட்டக்கலைத் துறை அல்லது கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் அல்லது வேளாண் அறிவியல் மையங்கள் மூலம் தேனீ வளர்ப்புத் தொழில் நுட்பம் குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. விரைவில், அனைத்து பயனாளிகளுக்கும் தேவையான தேனீப் பெட்டிகளை தோட்டக்கலைத் துறையின் ஒருங்கிணைப்புடன் தரமான நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்கு மாவட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் 1480 சுய உதவிக் குழு மகளிர் உறுப்பினர்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ரூ.2.22 கோடி நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டத்தின் மூலம் நடைபெறும் பருத்தி, சூரிய காந்தி, தென்னை, மக்காச் சோளம், கம்பு, சோளம், பழப்பயிர்கள், காய்கறிப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் பெற இயலும் என்பதோடு, தேனீ வளர்ப்பில் உள்ள நுணுக்கங்களை சுய உதவிக் குழு மகளிர் நன்கு தெரிந்து கொண்டு, அதன் மூலம் தேன் மட்டுமல்லாது, தேன் மகரந்தம், ராயல் ஜெல்லி, தேன் மெழுகு போன்ற தேனீ வளர்ப்பு மூலம் கிடைக்கும் துணைப் பொருட்களையும் சேகரித்து நல்ல வருமானம் ஈட்ட இயலும் என தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துக் கொள்கிறது.

### கடந்த மூன்றரை ஆண்டுகளில்

# 20.47 இலட்சம் இளைஞர்கள் - மாணவர்களுக்கு தொழில் தொடங்க பயிற்சி!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, நவ.12-

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக் கழகத்தில் நேற்று (11.11.2024) எம்.எஸ்.எம்.இ. துறையின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் - EDII சார்பில் நடைபெற்ற விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசியதாவது :-

“நேற்று நடைபெற்ற கண்காட்சியில் நம் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புகளான உயர் தொழில் நுட்ப விவசாய வாகனம் பழம் வெட்டும் கருவி ஒலி மாசினை கட்டுப்படுத்தும் கருவி கழிவறையை பயன்படுத்திய பின் தானாகவே சுத்தப்படுத்தும் கருவி பொதுக்குழாய்களில் தண்ணீர் வீணா வதைத் தடுக்கும் கருவி பிளாஸ்டிக் செங்கல் நகரும் சோலார் பேனல் என பல்வேறு கண்டுபிடிப்புகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த விழாவில் புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 60 மாணவ குழுக்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 20 மாணவக் குழுக்களுக்கும் என 80 புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ. 39 லட்சத்து 50 ஆயிரம் பரிசு தொகை வழங்கப்படுகிறது. இந்த பரிசுகளை பெறும் கல்லூரி மற்றும் அரசு பள்ளி மாணவர்களுக்கு என் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு தொழிலை தொடங்கி நடத்திட வேண்டும் என்றால் தொழில் முனைவு பயிற்சியும் வழிக்காட்டுதலும் மிகவும் முக்கியமானது. இதற்காகவே 2001 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் EDII தொடங்கப்பட்டது.

EDII நிறுவனம் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் முனைவு பயிற்சியுடன் புதிய கண்டு பிடிப்புகளை ஊக்கப்படுத்தும் விதமாக நிதி உதவிகளையும் அளித்து வருகிறது. கடந்த 23 ஆண்டுகளாக EDII நிறுவனம் இந்த பணியை சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய விஞ்ஞான உலகில் உலக நாடுகளுடன் நாம் போட்டி போடுவதற்கு புதிய புதிய கண்டுப்பிடிப்புகள் மிகவும் அவசியம். அத்தகைய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கிட தமிழ்நாட்டில் உள்ள புத்தாக்க சிந்தனை கொண்ட மாணவர்கள், இளைஞர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு பயிற்சிகள் அளித்து, தேவையான நிதி உதவிகளை வழங்கிட முதல்வர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

**தொழில் தொடங்க பயிற்சி!**

முதல்வர் அவர்களின் சீரிய வழிக்காட்டுதலின்படி EDII நிறுவனம் மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் , புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டம், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் தொழில் வளர் காப்பகங்கள் மூலமாக மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு மாவட்ட தலைநகரங்கள் கல்லூரிகள் பள்ளிகள் மற்றும் வட்டார அளவிலும் தொழில் தொடங்க பயிற்சியும், விழிப்புணர்வும் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், கழக அரசு பொறுப்பேற்ற 3 ½ ஆண்டு காலத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 56 ஆயிரத்து 620 நபர்களுக்கு தொழில் தொடங்க பயிற்சிகளும், புத்தாக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 306 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 6 லட்சத்து 40 ஆயிரத்து 820 கல்லூரி மாணவர்களுக்கு தொழில் தொடங்க விழிப்புணர்வும், அரசு கல்லூரிகளில் உள்ள தொழில் வளர் காப்பகங்கள் Incubation Centres மூலம் 1 லட்சத்து 5 ஆயிரம் மாணவர்களுக்கு பயிற்சிகளும் அளிக்க ப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்கள் கல்வியில் மட்டும் அல்லாமல் தொழிலிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக முதல்வர் அவர்கள் “பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தினை” அறிவித்தார். இதன்படி, 4,485 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்ற 12 லட்சத்து 45 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் கடந்த 3 ½ ஆண்டுகளில் 20 லட்சத்து 47 ஆயிரத்து 440 இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் தொடங்க பயிற்சியும், விழிப்புணர்வும் அளிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

தொழில் தொடங்க பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு தொழில் துறையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண போட்டிகள் நடத்தப்படுகிறது. நடப்பாண்டு நடத்தப்பட்ட போட்டிகளில், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீர்வுகள் பெறப்பட்டு அதில் 600 தேர்வு செய்யப்பட்டு சிறந்த 60 தீர்வுகளுக்கு இன்று ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது. கழக அரசு பொறுப்பேற்று இதுவரை 110 மாணவக் குழுக்களுக்கு ரூ. 77 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் தங்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஆராய்ச்சியை மேற்கொள்ளவும், வடிவமைப்புகளை தயாரிக்கவும், தேவைப்படும் நிதிக்காக புத்தாக்க பற்று சீட்டு திட்ட த்தின் கீழ் ரூ. 2 லட்சம் வழங்கப்படுகிறது.

கண்டுபிடிப்புகளை பொருட்களாக தயாரிக்கவும் - சந்தைப்படுத்தவும் ரூ. 5 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த 3 ½ ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 329 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 8 கோடியே 69 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 40 மாணவ குழுக்களின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கு தலா ரூ. 25 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை ரொக்க பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டும் - நடப்பாண்டும் மாநில அளவில் வெற்றி பெற்ற 80 சிறந்த மாணவ குழுக்களுக்கு ரூ. 32 லட்சம் ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு திட்டங்களின் கீழ் 519 இளைஞர்கள் மாணவ குழுக்களுக்கு ரூ. 9 கோடியே 78 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**ரூ.1.72 கோடியில் பயிற்சி நிறுவனம்!**

கல்லூரி மாணவர்களை இளம் தொழில் முனைவோர்களாக வளர்த்தெடுக்க 124 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் - Incubation Centres அமைக்கப்பட்டு உள்ளது. இதில் 9 அரசு கல்லூரிகளில் உள்ள இன்குபேஷன் சென்டர்களுக்கு ரூ. 20 கோடி மதிப்பீட்டில், புதிய இயந்திரங்கள் பரிசோதனை கூடங்கள் நிறுவப்பட்டு மேம்படுத்தப்பட்டு உள்ளன. அரசின் தொழில் வளர் காப்பகங்களை பயன்படுத்தி 198 மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளை தயாரித்து பலன் அடைந்துள்ளனர். தொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு “தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க பட்டய படிப்பு” தொடங்க ப்படும் என நடப்பாண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதற்காக, 260 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், EDII தலைமையிடத்தில் 10,260 சதுர அடியில் ரூ. 1 கோடியே 72 லட்சம் மதிப்பில் ஒரு பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த பட்டய படிப்பிற்கான விண்ணப்பங்கள் ஆன்லைன் வழியாக பெறப்பட்டு வருகிறது. இந்த விழாவில் கலந்துக் கொண்டுள்ள மாணவர்கள் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கண்காட்சியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

EDII இயக்குநர் இரா.அம்பலவாணன் வரவேற்புரை ஆற்றினார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இந்திய பொறுப்பாளர் திருமதி. மானசா, EDII, துணை இயக்குநர் கமலக்கண்ணன், மாணவர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவுத்தின்படி காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.எ. வழிகாட்டுதலின்படி மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் BA2 பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் சாலவாக்கம் கூட்ரோடு ராசி மஹாலில் நேற்று நடைபெற்றது. இதில் மதுராந்தகம் தனி தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் மற்றும் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எச்.சத்யசாய்நாதன் சிறப்புரையாற்றினார்கள். இதில் மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# 139 - 139 அ வட்ட நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

## பரிதி இளம்சுருதி - எம்.கிருஷ்ணமூர்த்தி- எம்.ஸ்ரீதரன் பங்கேற்பு!

சென்னை, நவ. 12 -

சைதை மேற்கு பகுதி 139 - 139 அ ஒருங்கிணைந்த வட்டக் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் ஆலோசனைக் கூட்டம் 10.11.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.45 மணிக்கு கட்ட பொம்மன் பிளாக்கில் உள்ள கலைஞர் பவளவிழா சமூக நலக்கூடத்தில் மாவட்ட செயலாளர்- அமைச்சர் மா. சுப்பிரமணியன். அறிவுறுத்தலின்படி 139 அ வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் பகுதி அவைத் தலைவர் களக்காடி.எல்லப்பன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், வட்டச் செயலாளர் அட்கோ.கமலநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, வழக்கறிஞர். எம். ஸ்ரீதரன்.எம்.சி, தொகுதி பொறுப்பாளர். மாநில அயலக அணி துணை அமைப்பாளர். பரிதி இளம் சுருதி ஆகியோர் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் வெற்றி பெற்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மீண்டும் கழக ஆட்சி அமையும் வகையில் வரும் நவம்பர் 16,17, 23, 24.அன்று நடைபெற உள்ள வாக்காளர் சேர்த்தல் முகாமில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று பேசினர்.

இக்கூட்டத்தில் சைதை. சாதிக், எம்.எஸ்.ஹரிபாபு, த.சம்பத், ஆர்.ரமேஷ், டி.என். சிவமணி, 139 அ வட்டக் கிளை நிர்வாகிகள் இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், 139 வட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம், ஆர். வி.நகர் அயாத்பாஷா, வட்டக் கழகத்தினர் வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன், ப. நரேஷ், சார்ப்.சரவணன், ஜிம்.க.பிரபு, கொடி.து.சுரேஷ் பாபு, டி.கோபாலகிருஷ்ணன், எஸ்.முகமது அலி, யமஹா. ராஜேஷ், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என்.ரமேஷ், எஸ்.கண்ணன், ப.எழிலரசன், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார், எஸ்.சையத் ஜலால் எஸ். சரத்குமார், இ.வ.ரகுபதி, துளசி சந்திரசேகர், ஜி.நாகதேவி, ஆர்.விஜயா, எஸ்.அன்னபூரணி, ஆட்டோ.சேகர், த. சேகர், வி.ஆதிகேசவன், எம். சுந்தரேசன், கே.பாரி, ஜி.தங்கராஜ், டி.சரவணன், என்.எஸ். கார்த்திக், ஜோ.அந்தோணி,கே. வெங்கடேசன், மா.கோவிந்தசாமி, ஆயில்.எம்.சரவணன் மு.மூர்த்தி, து.மா.பொ.சி,எஸ். முருகன், எம்.விஜய் மற்றும் பலர் பங்கேற்றனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி மதுராந்தகம் நகர BLA2 பாக ஆலோசனை கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி, மணிமாறன், மதுராந்தகம் நகர செயலாளர் கு.குமார், அவைத்தலைவர் பொன் கேசவன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர் உடன் மதுராந்தகம் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


